40. பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. எழிலரசன் மகள் பூங்குழலி தற்போது பத்தாம் வகுப்பு படித்து முடித்துவிட்டு பதினொன்றாம் வகுப்பு சேர்வதற்கு விரும்புகிறாள். பதினொன்றாம் வகுப்பு சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க.

42. தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி, திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை, காணொலி விளையாட்டுகளில் மூழ்கி இருக்கும் தோழன், எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடியே இருக்கும் தோழி இவர்கள் எந்நேரமும் நடப்பு உலகில் இருக்காமல் கற்பனையில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக.

ஆ) ***மொழிபெயர்க்க.*** KOOTHU

Therukoothu is its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana Mahabharata and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artist on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms koothu troupe. Through the orchestra singer has a singer, the artist sing in their own voices. Artists dress themselves with heavy customs and bright makeup. Koothu is very popular among rural areas.

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.*** ***(3x8=24)***

43. அ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

***(அல்லது)***

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே - **என்கிறது வெற்றி வேற்கை.**
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

***(அல்லது)***

ஆ) அன்னமய்யா என்ற பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. ***குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக.***

அ) முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - விண்வெளியும் கல்பனாச் சாவ்லாவும் - எதிர்கால விண்வெளி ஆய்வுகள் - முடிவுரை.

***(அல்லது)***

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுபொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.



| முதல் திருப்புதல் தேர்வு - 2024 | தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

***காலம் : 3-00 மணி*** **பத்தாம் வகுப்பு - தமிழ்** ***மதிப்பெண் : 100***

**பகுதி - I (மதிப்பெண்கள் : 15)**

***குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.***
***2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*** ***(15x1=15)***

1. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ________ ஆக உள்ளது
அ) முதலாம் திருமொழி ஆ) இரண்டாம் திருமொழி
இ) ஐந்தாம் திருமொழி ஈ) பத்தாம் திருமொழி

2. சதாவதானம் என்பது ________
அ) ஒரே நேரத்தில் நூறு செயல்களைச் செய்வது
ஆ) ஒரே நேரத்தில் பத்து செயல்களைச் செய்வது
இ) ஒரே நேரத்தில் பல செயல்களை நினைவில் கொண்டு விடை அளிப்பது
ஈ) ஒரே நேரத்தில் நூறு செயல்களை நினைவில் கொண்டு விடை அளிப்பது

3. கம்பரை ஆதரித்த வள்ளல் ________
அ) சடையப்ப வள்ளல்
ஆ) முதலாம் குலோத்துங்க சோழன்
இ) இரண்டாம் ராஜராஜ சோழன் ஈ) பாரி வள்ளல்

4. "ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா" என்று பாடியவர் ________
அ) பாரதிதாசன் ஆ) கம்பர்
இ) செய்குத்தம்பி பாவலர் ஈ) பாரதியார்

5. ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால் அது ________
அ) நோய் ஆ) அச்சம்
இ) அறியாமை ஈ) வறுமை

6. முல்லை நிலத்திற்குரிய சிறுபொழுது ________
அ) யாமம் ஆ) மாலை
இ) வைகறை ஈ) எற்பாடு

7. "நீ விளையாட வில்லையா?" என்ற வினாவிற்குக் "கால் வலிக்கிறது" என்று உரைப்பது ________
அ) உறுவது கூறல் விடை ஆ) வினா எதிர் வினாதல் விடை
இ) நேர் விடை ஈ) உற்றது உரைத்தல் விடை

8. பொருள்கோள் ________ வகைப்படும்
அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9

9. "என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது ________
அ) மரபு வழுவமைதி ஆ) பால் வழுவமைதி
இ) இட வழுவமைதி ஈ) திணை வழுவமைதி

10. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

*வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி சோதியின் மறைய*
*பொய்யோ எனும் 'இடையாளொடும் இளையானொடும் போனான்'*
*மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ?*
*ஐயோ இவன் வடிவு என்பதோர் அழியா அழகுடையான்*

11. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

12. பிரித்து எழுதுக: வெய்யோனொளி

13. 'முகில்' - பொருள் தருக.

14. 'விரிசோதி' இலக்கணக்குறிப்பு தருக.

15. 'இடையாள்' - எனப்படுபவர் யார்?

## பகுதி -2 (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

*குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.*
*வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.* *(4x2=8)*

16. *விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.*
அ) உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும்
ஆ) குலசேகர ஆழ்வாரின் காலம் எட்டாம் நூற்றாண்டு

17. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

18. செய்குத் தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

19. உறங்குகின்ற, கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' கால தூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

20. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

21. 'பொருள்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 2

*குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.* *(5x2=10)*

22. *இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
1) மலை - மாலை 2) விடு - வீடு

23. பொறித்த - பகுபத இலக்கணம் தருக.

24. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

25. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? இதோ.... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைககளை எடுத்தெழுதுக.

26. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.

27. *வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.*
காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா? எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் முடியிருக்கும் மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு காது கேட்கும்.

28. *கலைச்சொற்கள் தருக.* அ) Cabinet ஆ) Devotional literature

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு சுருக்கமாக விடையளிக்க.* *(2x3=6)*

29. *பின்வரும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*
கற்றவர் வழி அரசு செல்லும் என்கிறது. சங்க இலக்கியம் தோண்டும் அளவு ஊறும் நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்கிறது திருக்குறள். கல்வியைப் போற்றுவதைப் புறநானூற்றுக் காலத்திலிருந்து தற்காலம் வரை தொடர்கின்றனர் தமிழர் பூக்களை நாடிச் சென்று தேன் பருகும் வண்டுகளைப் போல நூல்களை நாடிச் சென்று அறிவு பெற வேண்டும்.



அ) கல்வியைப் போற்றுதல் எக்காலத்தில் இருந்து தொடர்கிறது?
ஆ) நூல்களை நாடிச்சென்று அறிவு பெறுதல் எதனோடு ஒப்பிடப்படுகிறது.
இ) கற்றவர் வழி அரசு செல்லும் என்று கூறும் இலக்கியம் எது?

30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

31. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

### பிரிவு - 2

*குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.*
*(வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)* *(2x3=6)*

32. சித்தாள் தன் தலையில் செங்கற்கள் சுமப்பது ஏன்?

33. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

34. *அடிபிறழாமல் எழுதுக.*
அ) 'வாளால் அறுத்து' ..... எனத் தொடங்கும் பாடல்.
*(அல்லது)*
ஆ) 'மாற்றம்' ... எனத் தொடங்கும் பாடல்.

### பிரிவு - 3

*(2x3=6)*

*குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.*

35. நேற்று இரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத்தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது. தந்தை என்னிடம், "இலட்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்று விட்டேன்" என்றவாரே அங்குச் சென்றேன் துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து "என்னடா விளையாட வேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்து விட்டேன் என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலட்சுமி தொட்டியில் இருந்த நீரைக் குடித்தாள் இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

36. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

37. *அலகிட்டு வாய்ப்பாடு தருக.*
அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

*குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.* *(5x5=25)*

38. அ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. *(அல்லது)*
ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல் - குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி அதனைச் செயல்படுத்தத் தலைமை ஆசிரியரின் ஒப்புதல் வேண்டி தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.
*(அல்லது)*
ஆ) உங்கள் தெருவில் பழுதடைந்த மின்விளக்குகளால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின் வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner

வினா எண் 41 | தேர்வு எண்

# மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பப் படிவம்

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ/மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :

10. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண்-ஆண்டு | பாடம் | மதிப்பெண்(100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :

11. தாய்மொழி :

12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ/மாணவியின் கையொப்பம்

www.Padasalai.Net

Scanned with OKEN Scanner